DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 87/2021

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW1

| | | |
|---|---|---|
| Name | : | **முருகேசன்** |
| Father/Husband Name | : | சின்னவேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2023

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 22.08.1955 தேதியில் ஆத்மநாதசாமியும், அவரது சகோதரரும் சேர்ந்து என் அப்பா சின்னவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.1. 02.07.2004 தேதியில் எனக்கு என் தகப்பனார் சின்னவேலு எழுதிக்கொடுத்த இனாம்செட்டில்மென்ட் பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.2. 20.02.1974 தேதியில் ராவுத்பிச்சை ராவுத்தர் என் அப்பா சின்னவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.3. 25.07.1963 தேதியில் பூச்சி என் அப்பா சின்னவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் அசல் வா.சா.ஆ.4. 22.08.1963 தேதியில் பாட்சா என் அப்பா சின்னவேலுக்கு கிரயப்பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.5. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்ட தனிவாட்டாட்சியரின் 31.10.2009 தேதியிட்ட உத்தரவு நகல் வா.சா.ஆ.6. என் அப்பா சின்னவேலு பெயரில்

உள்ள 06.11.2013 தேதியிட்ட 10(1) நகல் வா.சா.ஆ.7. என் அப்பா சின்னவேலு பெயரில் உள்ள 16.12.2013 தேதியிட்ட நத்தம் நிலவரித்திட்ட தூயசிட்டா நகல் வா.சா.ஆ.8. என் சின்னவேலுவின் இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.9. (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) என் அப்பா சின்னவேலுவின் வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ,10. (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) என்னுடைய மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள 10(1) நகல்கள் வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12. 12.08.2021 தேதியில் 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிவிப்பு நகல் வா.சா.ஆ.13. 1, 2 பிரதிவாதிகள் அதனை பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.14 மற்றும் 15. 24.08.2021 தேதியில் 1ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.16. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)